MAALAI MALAR

10 APR 2022

PAGE 2



# புதுவை பல்கலைக் கழகத்துக்கு பசுமை சாம்பியன் விருது

புதுச்சேரி, ஏப்.10–

புதுவை பல்கலைக்கழகம் துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமையில் கடந்த 4 ஆண்டுகளாக பசுமை வளாகம் (கீரீன் . கேம்பஸ்) என்ற திட்டத்தின் கீழ் பல நிலையான வளர்ச்சி மற்றும் தொடர்பான முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது.

இந்த முன்னோடி முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர் கல்வி துறையின் மகாத்மா காந்தி தேசிய ஊரக கல்வி மன்றம், 2021–22–ம் ஆண்டிற்கான மாவட்ட பசுமை சாம்பியன் விருது வழங்கி . புதுவை பல்கலைக்கழகத்தை அங்கீகரித்துள்ளது.

சிறந்த பசுமையாக்க நடைமுறைகள் மற்றும் நிலையான கழிவு மேலாண்மை, நீர் மேலாண்மை, ஆற்றல் மேலாண்மை, சுகாதாரம் மற்றும் பசுமை மேலாண்மை ஆகியவற்றுடன் இணங்கி நிற்கும் நிலையான நடவடிக்கைகள் மூலம் ஸ்வச்தா செயல் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. சிறப்புமிக்க இந்த விருதை புதுச்சேரி மாவட்ட கலெக்டர் வல்லவன், பல்கலைக்கழக பிரதிநிதிகளான உதவி பதிவாளர் மகேஷ், பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் ஆகியோரிடம் வழங்கினார். இவ்விருது பல்கலைக்கழ துணைவேந்தரிடம் ஒப்படை கப்பட்டது.

DINA THANTHI

10 APR 2022

PAGE 6

பொது பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு
அடிப்படையில்

# புதுச்சேரி பல்கலைக்கழக முதுநிலை பட்டப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை

புதுச்சேரி, ஏப்.10-

2022-ம் ஆண்டு பொது பல்கலைக்கழக நுழைவுத்தேர்வின் அடிப்படையில், 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை பட்டப்படிப்பைபுதுச்சேரி பல்கலைக்கழகம் வழங்க இருக்கிறது. இதில் பங்கேற்க விரும்புபவர்கள் http://cuet.samarth.ac.in/என்ற இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

மேலும் இதுதொடர்பான விவரங்களை www.pondiuni.edu.in/admissions-2022-23/ என்ற புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் சென்று தெரிந்துகொள்ளலாம். ஒருங்கிணைந்த முதுநிலை பட்டப்படிப்புக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க அடுத்த மாதம் (மே) 6-ந் தேதி கடைசி நாள் ஆகும்.

DINAKARAN

10 APR 2022

PAGE 5

# புதுவை பல்கலைக்கழகத்துக்கு பசுமை சாம்பியன் விருது



புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்ட மாவட்ட பசுமை சாம்பியன் விருது துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதுச்சேரி, ஏப். 10: புதுச்சேரி பல்கலைக்கழகம் துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமையில், கடந்த 4 ஆண்டுகளாக பசுமை வளாகம் (கிரீன் கேம்பஸ்) என்ற திட்டத்தின் கீழ் பல நிலையான வளர்ச்சி மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னோடி முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வி துறையின் மகாத்மா காந்தி தேசிய ஊரக கல்வி மன்றம், 2021-22ம் ஆண்டிற்கான மாவட்ட பசுமை சாம்பியன் விருது வழங்கி புதுவை பல்கலைக்கழகத்தை அங்கீகரித்துள்ளது.

சிறந்த பசுமையாக்க நடைமுறைகள் மற்றும் நிலையான கழிவு மேலாண்மை, நீர் மேலாண்மை, ஆற்றல் மேலாண்மை, சுகாதாரம் மற்றும் பசுமை மேலாண்மை ஆகியவற்றுடன் இணங்கி நிற்கும் நிலையான நடவடிக்கைகள் மூலம் ஸ்வச்தா செயல் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. சிறப்புமிக்க இந்த விருதை புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் வல்லவன், பல்கலைக்கழக பிரதிநிதிகளான உதவி பதிவாளர் மகேஷ், பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் ஆகியோரிடம் வழங்கினார். இவ்விருது பல்கலைக்கழக துணைவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டது.